# அல் இஸ்ராஉ, அல் மிஃராஜ்

எனும்

## மகத்துவமிக்க இரு அற்புதங்கள்

வெளியீடு

MRCA/13/1/PAS/08. ESTD 2010

ஜாமிஅதுல் இமாம் அல் அஷ்அரீ رضي الله عنه அறபுக் கல்லூரி

JAMIA AL IMAM AL ASHA^RI رضي الله عنه ARABIC COLLEGE

NO 10A, FREDRICA RD, WELLAWATTA, COLOMBO 06.

T.P. 011 7 446 336

மூன்றாம் வெளியீடு

றஜப் 1439 – மார்ச் 2018

# முன்னுரை

அல்ஹம்து லில்லாஹ். புகழ் யாவும் அல்லாஹ்வுக்கே. அல் இஸ்ராஉ, மிஃராஜ் ஆகியன நம் பாசமிகு தூதர் முஹம்மத் ﷺ அவர்களின் வாழ்வில் இடம்பெற்ற அதிமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளாகும். மேலும் இஸ்லாத்தின் மிகப் பெரும் முக்கிய கடமையான ஐவேளைத் தொழுகைகளும் இந்நிகழ்வுகளின் போதே விதியாக்கப்பட்டன.

இந்த இஸ்ராஉ மற்றும் மிஃராஜின் போது ஆச்சரியப்படத்தக்க பல விடயங்களும் நம் தலைவர் முஹம்மத் ﷺ அவர்களுக்கு காட்டப்பட்டது.

இஸ்லாமிய தூய கொள்கைக்கு முரண்படும் வகையில் இஸ்ராஉ, மிஃராஜ் தொடர்பாக பரவி வரும் வழிகேடான கருத்துகளை இனம்காட்டி, இந்த நிகழ்வுகளின் போது நடைபெற்ற மெய்யான தகவல்களை ஆதார அடிப்படையில் ஒன்றுதிரட்டி, இஸ்ராஉ மற்றும் மிஃராஜ் தொடர்பாக முழுமையான விளக்கமொன்றை தரும்படியாக இந்நூல் எழுதப்பட்டுள்ளதே இதன் சிறப்பம்சமாகும்.

இது நூலாக்கம் பெறுவதற்கு உழைத்த அனைவரையும் அல்லாஹ் பொருந்திக் கொள்வதோடு இந்நூலின் பலன் முஸ்லிம்கள் அனைவருக்கும் போய் சேர வல்லமையுடைய அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றோம்.

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ

الحمد لله المكون الأكوان الموجود أزلا وأبدا بلا جهة ولا مكان والصلاة والسلام على مُحَّد خير الأنام وعلى آله وصحبه ومن تبعهم بإحسان

புகழ் யாவும் படைப்புகள் அனைத்தையும் இல்லாமையிலிருந்து படைத்து, அவைகளுக்கு எவ்விதத்திலும் ஒப்பாகாத அழ்ழாஹ்வுக்கே!. மேலும் அதிக சிறப்புகளையும், தன் உம்மத்தின் மீது முஹம்மத் ﷺ அவர்கள் எதையெல்லாம் பயப்படுவார்களோ அது அனைத்தை விட்டும் அச்சமின்மையையும் அழ்ழாஹ் அவர்களுக்கு வழங்குவானாக!

# அல்-இஸ்ராஉ

அல்-இஸ்ராஉ நிகழ்வு தொடர்பாக அல்-குர்ஆன்,

سُبۡحَٰنَ ٱلَّذِيٓ أَسۡرَىٰ بِعَبۡدِهِۦ لَيۡلٗا مِّنَ ٱلۡمَسۡجِدِ ٱلۡحَرَامِ إِلَى ٱلۡمَسۡجِدِ ٱلۡأَقۡصَا ٱلَّذِي بَٰرَكۡنَا حَوۡلَهُۥ لِنُرِيَهُۥ مِنۡ ءَايَٰتِنَآۚ إِنَّهُۥ هُوَ ٱلسَّمِيعُ ٱلۡبَصِيرُ ١

என்பதாக தெளிவாக கூறுகிறது.

விளக்கம் : “படைப்புகளுக்கு ஒப்பாகுவதை விட்டும் அழ்ழாஹ் பரிசுத்தமானவன். அவன்தான் முஹம்மத் ﷺ அவர்களை புனித மக்கா நகரிலுள்ள க.்.பாவிலிருந்து குத்ஸிலுள்ள மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாயலுக்கு இராவழிப்பயணத்தை மேற்கொள்ளச் செய்தான். அப்பள்ளிவாசலை மேன்மைமிக்க பள்ளிவாசலாகவும் அழ்ழாஹ் ஆக்கியுள்ளான். இந்த இஸ்ராஉ எனும் பயணமானது, அழ்ழாஹ் இணை எதுவுமில்லாத தனித்தவன் மேலும் முஹம்மத் ﷺ அவர்கள்

அழ்ழாஹ்வின் மெய்யான ஒரு தூதர் என்பதனையும் அறிவிக்கும் பல அத்தாட்சிகளை நம் தூதர் முஹம்மத் ﷺ அவர்களுக்கு காட்டிக் கொடுப்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டது.''

*அல்-குர்ஆன். அத்தியாயம் அல்-இஸ்ராஉ, வசனம் 01.*

இஸ்ராஉ என்பது இரவிலே மேற்கொள்ளப்படும் பயணமாகும். இஸ்ராஉ, மிஃராஜ் ஆகிய இரு நிகழ்வுகளும் ஒரே இரவின் ஒரு பகுதியில் நடைபெற்றவைகளாகும். மஸ்ஜிதுல் ஹறாம் பூமியிலே சிறந்த இடமாகிய மக்காவிலே அமைந்துள்ளது. இப்பள்ளிவாசல் சங்கை வாய்ந்த ஒரு இடமாக திகழ்வதனாலும் அதற்கு தனிப்பட்ட பிரத்தியேக சட்டங்கள் இருப்பதனாலும் மஸ்ஜிதுல் ஹறாம் (சங்கையான பள்ளிவாசல்) என்று அழைக்கப்படுகிறது. இந்த மஸ்ஜிதுல் ஹறாமிலே தொழப்படக்கூடிய தொழுகைக்கு பன்மடங்கு நன்மைகள் வழங்கப்படுவதோடு, இப்புனித தளத்திலே தரைவாழும் பிராணிகளை வேட்டையாடுவதும் (ஹறாம்) விலக்கப்பட்டுள்ளது.

மஸ்ஜிதுல் அக்ஸா : இப்பள்ளிவாயல் மஸ்ஜிதுல் ஹறாமை விட்டும் தொலைதூரத்தில் இருப்பதின் காரணமாக மஸ்ஜிதுல் அக்ஸா என்று அழைக்கப்படுகிறது. இவ்விரண்டு புனித பள்ளிவாசல்களையும் அழ்ழாஹ்வின் தூதர் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தான் கட்டினார்கள். ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கஃபாவைக் கட்டி 40 வருடங்களின் பின்னர் மஸ்ஜிதுல் அக்ஸாவைக் கட்டினார்கள். நபிமார்களை பின்பற்றியவர்கள்,

அல்லாஹ்வை வணங்குவதற்காக வணக்கஸ்தலங்களை ஏற்பாடு செய்தது போன்று இப்பள்ளிவாசலும் அல்லாஹ்வை வணங்குவதற்காக அமைக்கப்பட்டதனால் மஸ்ஜித் என அல்-குர்ஆனிலே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப்பள்ளிவாசல் அமைந்துள்ள ஷாம் தேசமானது பறக்கத் (அதிக நலவுகளை) பொருந்திய பூமியாகும்.

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் "யாஅல்லாஹ் எங்களுக்கு ஷாம் தேசத்திலும் யமன் தேசத்திலும் பரகத் செய்வாயாக." என பிரார்த்தித்தார்கள். அங்கிருந்த சிலர் "அல்லாஹ்வுடைய தூதரே எங்களுடைய நஜ்துக்கும் பிரார்த்தியுங்கள்" எனக் கூறினார்கள். "அங்கேதான் குழப்பங்கள் ஏற்படும், மேலும் அங்கேதான் ஷைத்தானுடைய ஆதிக்கமும் வலுப்பெறும்" எனக் கூறியதாக ஸஹீஹுல் புஹாரியிலே பதிவிடப்பட்டுள்ளது. எனவே ஷாம் பூமி பறக்கத் பொருந்திய பூமி என்பது தெட்டத் தெளிவாக இந்த ஹதீஸினூடாக நமக்கு புலப்படுகின்றது. இப்புனித மஸ்ஜிதுல் அக்ஸா இருக்கக்கூடிய பலஸ்தீன் நாடு ஷாம் தேசத்துக்கு உட்பட்டதாகும்.

அல்லாஹ் நபிமார்களை மனிதர்களுக்கு ரஹ்மத்தாக அனுப்பியுள்ளான். ஏனெனில் நாம் எமது புத்தியை வைத்து மாத்திரம் நம்மை நாளை மறுமையில் ஜெயம் பெறவைக்கக்கூடிய விடயங்களை அறிந்து கொள்ளமுடியாது. ஆகவே நாளை மறுமையில் நம்மை வெற்றிபெறச் செய்யக்கூடிய விடயங்களை நமக்கு கற்றுத் தர, அல்லாஹ்

எமக்களித்த பெரும் றஹ்மத் ஒன்றே நபிமார்களாகும். அந்த நபிமார்கள் உண்மையாளர்கள் என்பதற்கு அத்தாட்சியாக அழ்ழாஹ் அவர்களுக்கு மு.ஃ.ஜிஸஹ்களை (அற்புதங்களை) வழங்கி, அதன் மூலம் அவர்களை பலப்படுத்தினான். மு.ஃ.ஜிஸஹ் என்பது : வழமைக்கு மாற்றமான ஒரு விடயமாகும். அதாவது மக்கள் வழமையாக செய்து வரும் விடயங்களுக்கு மாற்றமானதாகும். நபிமார்களின் மூலமாகவே வெளிப்படும் இந்த மு.ஃ.ஜிஸத்களானது அவர்களுடைய வாதத்துக்கு தோதுவானதாகவே இருப்பதோடு அதற்கு எதிராக அது போன்ற ஒன்றை எந்தவொரு மனிதனாலும் கொண்டு வரவும் முடியாது.

நபிமார்களில் எம் பெருமானார் ﷺ அவர்களே பெரும் அற்புதங்களை நிகழ்த்திய நபியாகும். "அழ்ழாஹ் முன்னைய நபிமார்களுக்கு வழங்கிய அற்புதங்களைப் போன்ற அல்லது அதைவிட மகத்தான அற்புதங்களையே எம் தலைவர் முஹம்மத் ﷺ அவர்களுக்கு வழங்கினான்". என இமாம் அஷ்ஷாபிஈ றழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் கூறியுள்ளார்கள்.[1]

இப்னு அபீ ஹாதம் றழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் : "அழ்ழாஹ், ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அவனுடைய உத்தரவின் பிரகாரம் மரணித்தோரை உயிர்ப்பிக்கக்கூடிய அற்புதத்தை வழங்கினானே" என இமாம் ஷாபிஈ றழியழ்ழாஹு அன்ஹு அவர்களிடம் கேட்டார்கள். அதற்கவர்கள் "ஒரு ஈச்சமரக்குற்றி, முஹம்மத் ﷺ அவர்களை விட்டும்

---

[1] பத்ஹுல் பாரீ – பாகம் 06 பக்கம் 698 மற்றும் மனாகிப் அஷ்ஷாபிஈ லி அபீஹாதம் அர் ராஸீ

பிரிந்ததற்காக அழுத அழுகையை அங்கிருந்தோர் கேட்டனர். எனவே இது ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதத்தைப் பார்க்கிலும் ஒரு பெரும் அற்புதமல்லவா!" என இமாம் ஷாபிஈ றழியல்லாஹு அன்ஹு அவர்கள் பதிலளித்தார்கள்.

முஹம்மத் ﷺ அவர்களுடைய அற்புதத்தைப் புகழ்ந்து சிலர் பின்வருமாறு ஒரு கவியை இயற்றியுள்ளனர்.

*மூஸா அலைஹிஸ்ஸலாம் தன்னுடைய*
*கூட்டத்தினருக்கு கல்லிலிருந்து நீர் புகட்டினார்கள்.*

*ஆனால் எம் பெருமானார் ﷺ அவர்களோ தம் சிறப்புப்*
*பொருந்திய விரல்களிலிருந்து நீர் புகட்டினார்கள்.*

*ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தம்*
*பிரார்த்தனையின் மூலம் எத்தனையோ பிறவிக்*
*குருடர்களைக் குணப்படுத்தினார்கள்.*

*ஆனால் எம்பெருமானார் ﷺ அவர்களோ தம் சிறப்புப்*
*பொருந்திய உள்ளங்கையினால் எத்தனையோ*
*மனிதர்களின் பார்வைகளை மீளப் பெற்றுக்*
*கொடுத்தார்கள்.*

அல்-இஸ்ராஉ எனும் இவ்வற்புதம் அல்-குர்ஆன், அல்-ஹதீஸிலே கூறப்பட்டு வந்துள்ள ஒரு முக்கிய நிகழ்வாகும். எனவே இதை ஏற்றுக்கொள்வது கடமையாகும். அதாவது அல்லாஹ் பெருமானார் முஹம்மத் ﷺ அவர்களை மக்காவிலுள்ள மஸ்ஜிதுல் ஹறாமிலிருந்து பலஸ்தீனிலுள்ள மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு இராவழிப் பயணம் மேற்கொள்ளச் செய்தான் என நம்புவது அவசியமாகும்.

பெருமானார் முஹம்மத் ﷺ தம் புனிதம் பொருந்திய உடல், ரூஹ் மற்றும் விழிப்பு நிலையில் இப்பயணத்தை மேற்கொண்டார்கள் என்பதே அஸ்-ஸலபுஸ் ஸாலிஹீன்கள், ஹதீஸ் கலை அறிஞர்கள், அகீதாக் கலை மேதைகள், மார்க்க சட்டக் கலை வல்லுனர்கள், அல்-குர்ஆன் விரிவுரையாளர்கள் ஆகியோரால் ஏகோபிக்கப்பட்ட தீர்ப்பாகும். மேலும் இதையே ஸஹாபிகளான அனஸ், இப்னு அப்பாஸ், ஹுதைபா, ஜாபிர், உமர் றழியல்ழாஹு அன்ஹும் போன்ற இன்னும் பல ஸஹாபாக்களும், மேலும் இமாம் அஹ்மத், அத்தபரீ றஹ்மதுல்ழாஹி அலைஹிமா போன்ற அறிஞர்களும் கூறியுள்ளனர். எனவே முஹம்மத் ﷺ அவர்கள் இஸ்ராஉ பயணத்தை மேற்கொண்டார்கள் என்பதில் கருத்து வேற்றுமையே கிடையாது. ஏனெனில் இது உண்மை என்பதற்கு அசைக்க முடியாத பல ஆதாரங்கள் இருக்கின்றன. எனவே யார் இதை பொய்ப்பிப்பாரோ அவர் அல்-குர்ஆனைப் பொய்ப்பித்தவராகிவிடுவார். அல்-குர்ஆனைப் பொய்ப்பிப்பவர் இஸ்லாம் மார்க்கத்தை விட்டும் வெளியேறிவிடுவார். அதாவது காபிராகிவிடுவார்.


ஷத்தாத் இப்னு அவ்ஸ் றழியல்ழாஹு அன்ஹு எனும் ஸஹாபி கூறுகின்றார் : “அழ்ழாஹ்வின் தூதரே! நீங்கள் எவ்வாறு இஸ்ராஉ பயணம் மேற்கொண்டீர்கள்? எனக் கேட்டோம்.” அதற்கவர்கள் “நான் என்னுடைய தோழர்களுக்கு இஷாத் தொழுகையை தொழுவித்தேன். ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ‘புராக்’ எனும்,

கழுதையை விட உயர்ந்த கோவேறுக் கழுதையை விட குட்டையான, வெள்ளை நிற பிராணியுடன் வந்தார்கள். எனக்கு அதில் ஏறுமாறு கூறினார்கள். என் மீது கொண்ட சந்தோஷத்தின் காரணமாக அது சற்று அசைந்தது. பின்பு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அதன் காதை பிடித்து சுற்றினார்கள். பின்பு அப்பிராணி எங்களை சுமந்து கொண்டு அதன் பார்வை எட்டும் தூரத்தில் தன் கால்குழம்பை வைத்து மிக விரைவாக சென்றது. நாம் பேரீத்தம் மரங்கள் இருக்கக்கூடிய ஓர் இடத்தை வந்தடைந்தோம். என்னை இறங்கித் தொழுமாறு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள். நான் இறங்கித் தொழுதேன்.

பின்பு அப்பிராணியின் மீது மீண்டும் ஏறினோம். “நீங்கள் எங்கு தொழுதீர்கள்? என்பதை நீங்கள் அறிவீர்களா?” என ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் என்னிடம் கேட்டு, “நீங்கள் மதீனாவில் தொழுதீர்கள்” எனக் கூறினார்கள். பின்பு அப்பிராணி எங்களை சுமந்து கொண்டு அதன் பார்வை எட்டும் தூரத்தில் தன் கால்குழம்பை வைத்து மிக விரைவாக சென்றது. பின்னர் நாம் ஓர் இடத்தை வந்தடைந்தோம். அங்கே என்னை இறங்கித் தொழுமாறு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள். நான் இறங்கித் தொழுதேன்.

பின்பு அப்பிராணியின் மீது மீண்டும் ஏறினோம். “நீங்கள் எங்கு தொழுதீர்கள்? என்பதை நீங்கள் அறிவீர்களா” என ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் என்னிடம் கேட்டு, “இதுதான் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள், எழுத்துகளற்ற ஓசையற்ற அல்லாஹ்வுடைய

பேச்சை கேட்ட ‘தூர் ஸைனாஉ’ என்ற மலையாகும். அங்கு தான் நீங்கள் தொழுதீர்கள்.” என கூறினார்கள். பின்பு அப்பிராணி எங்களை சுமந்து கொண்டு அதன் பார்வை எட்டும் தூரத்தில் தன் கால்குழம்பை வைத்து மிக விரைவாக சென்றது. பின்னர் நாம் ஓர் இடத்தை வந்தடைந்தோம். அங்கே மாளிகைகள் எமக்கு தென்பட்டன. அங்கே என்னை இறங்கித் தொழுமாறு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள். நான் இறங்கித் தொழுதேன்.




மக்கா நகரிலுள்ள மஸ்ஜிதுல் ஹறாமிலிருந்து பலஸ்தீனிலுள்ள மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு மேற்கொள்ளப்பட்ட அல்-இஸ்ராஉ பயணத்தின் பாதை விளக்கப்படம்

பின்பு அப்பிராணியின் மீது மீண்டும் ஏறினோம். “நீங்கள் எங்கு தொழுதீர்கள்? என்பதை நீங்கள் அறிவீர்களா” என ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் என்னிடம் கேட்டு, “ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பிறந்த இடமாகிய ‘பைதுல் லஹ்ம்’ எனும் இடத்தில் தான் தொழுதீர்கள்.” என கூறினார்கள். பின்னர் யமன்

புற வாயிலினூடாக மதீனாவில் நுழையும் வரை என்னை அழைத்துச் சென்றார்கள். அங்கு வந்த பின் புராக் பிராணியைக் கட்டினார்கள்.

அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள், மக்காவிலுள்ள உம்முஹானி.். றழியழ்ழாஹு அன்ஹா அவர்களின் வீட்டிலிருந்து 'இஸ்ராஉ' பயணத்தை மேற்கொள்வதற்கு முன்னதாக அவர்களது நெஞ்சு பிளக்கப்பட்டது.

அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியதாக அபூ தர் றழியழ்ழாஹு அன்ஹு அவர்களின் வாயிலாக அனஸ் இப்னு மாலிக் றழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள். "நான் மக்காவில் இருக்கும் போது என் வீட்டுக் கூரை பிரிக்கப்பட்டது. ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறங்கி வந்து என் நெஞ்சைப் பிளந்து, அதனை 'ஸம்ஸம்' நீரால் கழுவினார்கள். பின்னர் ஹிக்மதும் ஈமானும் நிரம்பிய தங்கத்தினாலான ஒரு தட்டை ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கொண்டு வந்து என் நெஞ்சில் ஊற்றினார்கள். பின்னர் அதனை மூடினார்கள்."

அறிவித்தவர் : இமாம் முஸ்லிம்

ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முதல் அவர்களுக்கு பின்னால் வந்த அனைத்து நபிமார்களையும் 'மஸ்ஜிதுல் அக்ஸா' பள்ளிவாயலிலே நம் தலைவர் முஹம்மத் ﷺ அவர்களுக்காக ஒன்றுசேர்க்கப்பட்டது. முஹம்மத் ﷺ அவர்கள் அவ்வனைவருக்கும் இமாமாக

தொழுகை நடாத்தினார்கள். இது, நபிமார்கள் மரணித்ததன் பின்னரும் அல்லாஹ்வின் நாட்டப்படி அவர்களால் செயலாற்ற முடியும் என்பதற்கு ஆதாரமாகும். மேலும் இவர்களின் மூலம் யாரெல்லாம் பிரயோசனம் பெறுவதை அல்லாஹ் நாடியுள்ளானோ அவர்களுக்கு அவர்கள் பிரயோசனம் அளிப்பார்கள். அவர்கள் சாதாரண மனிதர்களைப் போன்றவர்களல்ல என்ற உண்மையையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

"நபிமார்கள் அவர்களுடைய கப்ருகளிலே தொழுதவர்களாக ஹயாதுடன் இருக்கிறார்கள்." என முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள்.

*அறிவித்தவர்கள் : அல்-இமாம் அல்-பைஹகீ, அல்-பஸ்ஸார் ரஹிமஹுமல்லாஹ் ஆகியோரும் இவர்கள் அல்லாதோரும்.*

"நான் 'மஸ்ஜிதுல் அக்ஸா' பள்ளியில் நுழைந்தேன். எனக்காக அனைத்து நபிமார்களும் ஒன்று சேர்க்கப்பட்டிருந்தார்கள். அவர்களுக்கு இமாமாக நின்று தொழுகை நடாத்த என்னை ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முற்படுத்தினார்கள். பின்னர் நான் வானத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டேன்." என மிஃராஜ், இஸ்ராஉ சம்பந்தமான ஹதீஸிலே வந்துள்ளது.

*அறிவித்தவர் : அல்-இமாம் அந்நஸாயீ றஹ்மதுல்லாஹி அலைஹி*

## இஸ்ராஉ பயணத்தின் போது பெருமானார் முஹம்மத் ﷺ அவர்கள் கண்ட ஆச்சரியமான விடயங்கள் சில

1. **துன்யா** : பைதுல் மக்திஸுக்கு செல்லும் பாதையில் இந்த துன்யாவை ஒரு கிழவியின் தோற்றத்திலே கண்டார்கள்.

2. **இப்லீஸ்** : பாதையை விட்டும் ஓரமாக இருந்த ஒன்று தன்னை அழைப்பதாக கண்டார்கள். அதுதான் இப்லீஸாகும். ஆரம்பத்திலே அவன் மு.்.மினான ஜின்னாக இருந்தான். பின்னர் அழ்ழாஹ்வுக்கு எதிராக செயல் பட்டு காபிராக மாறினான். இது பற்றி அல்-குர்ஆன்

وَإِذۡ قُلۡنَا لِلۡمَلَٰٓئِكَةِ ٱسۡجُدُواْ لِأٓدَمَ فَسَجَدُوٓاْ إِلَّآ إِبۡلِيسَ كَانَ مِنَ ٱلۡجِنِّ فَفَسَقَ عَنۡ أَمۡرِ رَبِّهِۦٓۗ

விளக்கம் : “ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஸுஜூத் செய்யுமாறு மலக்குமார்களுக்கும் இப்லீஸுக்கும் அழ்ழாஹ் கட்டளையிட்டான். இந்த ஸுஜூத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு காணிக்கைக்காக அதாவது அவர்களை மரியாதை செய்வதற்காக ஏவப்பட்டதாகும். முன்னைய சில ஷரீஅஹ்களில் இவ்வாறான ஸுஜூத் அனுமதிக்கப்பட்டிருந்தது. அழ்ழாஹ்வின் இக்கட்டளையை ஏற்று மலக்குமார்கள் அனைவரும் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஸுஜூத் செய்தனர். ஆனால் ஜின் இனத்தைச் சேர்ந்த இப்லீஸ் ஸுஜூத் செய்ய மறுத்து, காபிரானான்.” என்பதாக தெளிபடுத்தியுள்ளது.

இப்லீஸ் மலக்குமார்களின் தலைவனாக இருந்தான் எனக் கூறக்கூடாது. ஏனெனில் அவன் மலக்குகளைச் சார்ந்தவனல்ல. அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் : "மலக்குமார்கள் ஒளியால் படைக்கப்பட்டவர்கள். ஜின்கள் நெருப்பால் படைக்கப்பட்டவர்கள்." எனவே மேற்கூறப்பட்ட ஹதீஸின் மூலம் இப்லீஸ் மலக்குகளை சார்ந்தவனல்ல என்பது நமக்கு தெளிவாகின்றது.

மேற்குறித்த அல்-குர்ஆன் வசனம் மற்றும் ஹதீஸ் "இப்லீஸ் ஜின் இனத்தைச் சேர்ந்தவனே" என்று தெளிவாக குறிப்பிடுகின்றன.

3. ***மாஷிதஹ் பின்து பிர்அவ்ன்*** : *அதாவது பிர்அவ்னின் மகளின் தலைமுடியை வாரும் பெண். இப்பெண்ணுடைய கப்ரிலிருந்து ஒரு நறுமணத்தை முஹம்மத் ﷺ அவர்கள் நுகர்ந்தார்கள். இப்பெண் ஸாலிஹான மு.்.மினான பெண். இந்தப்பெண்ணுடைய சம்பவத்தைப் பார்ப்போம். இப்பெண் ஒரு தடவை பிர்அவ்னுடைய மகளின் தலைமுடியை வாரிக் கொண்டிருந்தார். இப்பெண்ணுடைய கையிலிருந்து சீப்பு கீழே விழுந்தது. 'பிஸ்மில்லாஹ்' (அழ்ழாஹ்வின் பெயர் நாமம் கூறி எடுக்கிறேன்) எனக் கூறி அதனை எடுத்தார். பிர்அவ்னுடைய மகள் "என் தந்தையல்லாத வேறு கடவுள் உனக்கு இருக்கின்றானா?" எனக் கேட்டாள். அதற்கு இப்பெண் "அழ்ழாஹ்தான் எனதும் உனதும்*

றப்பாகும்.'' இவ்விடயத்தை பிர்அவ்னுடைய மகள் பிர்அவ்னுக்குத் தெரிவித்ததையடுத்து அவன் அப்பெண்ணுக்கு இஸ்லாம் மார்க்கத்தை விடும்படி ஏவினான். அப்பெண் அவனுடைய கட்டளையை மறுத்து இஸ்லாத்திலே இருப்பேன் எனக் கூறினாள். உடனே பிர்அவ்ன் தண்ணீரை கடுமையாக சூடேற்றினான். கடும் சூடான கொதிக்கும் நீரிலே இப்பெண்ணின் பிள்ளைகளை போட்டான். இறுதியாக அவளுடைய பால்குடிக்கும் பிள்ளையை அந்த நீரில் போடும் சந்தர்ப்பம் வந்த போது. அப்பிள்ளை பின்வருமாறு தாயுடன் பேசியது. ''என்னுடைய தாயே நீங்கள் பொறுமையாக இருங்கள். நாளை மறுமையின் வேதனை இந்த துன்யாவுடைய வேதனையை விடவும் மிகக் கொடூரமானது. நீங்கள் மனம் தளர வேண்டாம். நீங்கள் உண்மையான சத்தியக் கொள்கையில் இருக்கின்றீர்கள்.'' இதனை கேட்ட அப்பெண் பிர்அவ்னுக்கு கூறினாள் : ''என்னுடைய ஒரு வேண்டுகோளை நீ நிறைவேற்ற வேண்டும் அதாவது என்னுடைய எழும்புகளை ஒன்று சேர்த்து அவற்றை ஒரே இடத்தில் புதைக்க வேண்டும்.'' அதற்கு அவன் ''நீ கூறியது உனக்கு நடக்கும்'' என கூறி அப்பெண்ணையும் கொதிக்கும் நீரில் போட்டான். அப்பெண்ணும், அவளது பிள்ளைகளும் ஷஹீதுகளாக மரணித்தார்கள். அவர்கள் புதைக்கப்பட்ட கப்றரையிலிருந்து வந்த நறுமணத்தையே நம் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் நுகர்ந்தார்கள்.

“அழ்ழாஹ்வின் அவ்லியாஉகள், ஸாலிஹீன்கள் அடக்கம் செய்யப்பட்ட கப்றுகளுக்கு அழ்ழாஹ்வின் விஷேட றஹ்மத்களும், பறக்கத்களும் இறங்குகின்றன” என்பதை மேற்குறித்த ஹதீஸின் மூலம் உணர்த்தப்படுவதை அஹ்லுஸ்ஸுன்னஹ் வல் ஜமாஅத்தினர்களான அஷ்அரிய்யஹ்களும், மாதுரிதிய்யஹ்களும் தத்தமது நூல்களில் தெளிவுபடுத்தியுள்ளனர்.

4. **குழப்பங்களை தூண்டக்கூடிய பிரசங்கிகள்** : சிலருடைய நாவுகளும் உதடுகளும் நெருப்புக் கத்தரிக் கோல்களால் கத்தரிக்கப்படுவதைக் பெருமானார் ﷺ அவர்கள் கண்டார்கள். இவர்கள் தான் பிரச்சினைகளையும் குழப்பங்களையும் தூண்டக்கூடிய பிரசங்கிகள். அதாவது மக்களை வழிகேடு, குழப்பம், மோசடி, ஏமாற்றுதல் போன்றவற்றின் பால் அழைத்தவர்கள்.

5. **கெட்ட வார்த்தைகளைப் பேசுபவர்கள்** : ஒரு காளை மாடு சிறிய நெருக்கமான ஒரு துவாரத்தினூடாக வெளியேறி, மீண்டும் அத்துவாரத்தினூடாக நுழைய முடியாமல் தவிப்பதை பெருமானார் ﷺ அவர்கள் கண்டார்கள். ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள் : “இவன் தான் மக்களுக்கு பிரச்சினைகளையும், தீங்குகளையும் ஏற்படுத்தக்கூடிய மோசமான வார்த்தைகளை கூறி, பின்னர் அதை மீளப்பெற முயற்சித்து முடியாமல் போனவன்.

6. **ஸகாத்தை முறைப்படி நிறைவேற்றாதவர்கள்** : மிருகங்களைப் போன்று மேய்ந்து திரியக்கூடிய ஒரு கூட்டத்தை எம் பெருமானார் ﷺ அவர்கள் கண்டார்கள். அவர்களுடைய மர்மஸ்தானங்கள் மீது சிறிய திரைகள் இருந்தன. “இவர்கள் தான் ஸகாத்தை முறைப்படி நிறைவேற்றாதவர்கள்” என பெருமானார் ﷺ அவர்களுக்கு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள்.

7. **பர்ளான தொழுகையை விட்டவர்கள்** : தலைகள் நொறுக்கப்பட்டு பின்னர் அத்தலைகள் இருந்த நிலைக்கு மாற்றப்பட்டுக் கொண்டிருந்ததை பெருமானார் ﷺ அவர்கள் கண்டார்கள். “இவர்கள் யாரெனில் தொழுகையை நிறைவேற்றுவதில் தலை பாரமானவர்கள். அதாவது பர்ளான தொழுகைகளை சோம்பேறித்தனமாக விட்டவர்கள்” என ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள்.

8. **விபச்சாரம் செய்தவர்கள்** : நல்ல இறைச்சியை விட்டு விட்டு நாற்றம் வீசக்கூடிய இறைச்சியை சாப்பிட போட்டி போட்டுக்கொண்டிருந்த ஒரு கூட்டத்தாரை பெருமானார் ﷺ அவர்கள் பார்த்தார்கள். “இவர்கள் தான் உங்கள் சமுதாயத்தில் ஹலாலான மனைவியரை விட்டு விட்டு தங்களுக்கு ஹலாலல்லாத பெண்களுடன் விபச்சாரத்தில் ஈடுபட்டவர்கள்.” என ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள்.

9. **மது அருந்தியவர்கள்** : விபச்சாரம் செய்தவர்களிடமிருந்து வெளிப்படக்கூடிய சீழ் சலத்ததைக் குடிக்கக்கூடிய ஒரு கூட்டத்தை பெருமானார் ﷺ அவர்கள் கண்டார்கள். “இவர்கள் தான் துன்யாவில் ஹறாமாக்கப்பட்ட மதுவை அருந்தியவர்கள்” என ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பெருமானார் ﷺ அவர்களுக்கு கூறினார்கள்.

10. **புறம்பேசித் திரிந்தவர்கள்** : செம்பினாலான நகங்களினால் தங்களது முகங்களையும், நெஞ்சுகளையும் கீறிக் கிழித்துக் கொண்டிருந்த ஒரு கூட்டத்தை பெருமானார் ﷺ அவர்கள் கண்டார்கள். “இவர்கள் தான் மக்களைப் பற்றி அவர்கள் இல்லாத போது அவர்களது குறைகளைப் பேசியவர்கள்.” என ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள்.

புறம் பேசுவது, கோள்சொல்வது, சிறுநீருடைய விடயத்தில் கவனம் செலுத்தாமல் இருப்பது கப்ரில் வேதனை கிடைப்பதற்கு முக்கிய காரணங்களாகும். தக்வாதாரிகளை புறம் பேசுவது பெரும் பாவமொன்றாகும். ஆனாலும் புறம் பேசுவது நோன்பை முறிக்காது. இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள் : “புறம் பேசுவது நோன்பை முறிக்குமென்றிருந்தால் நம்முடைய நோன்புகள் எதுவும் நிறைவேறியிருக்கமாட்டாது.”

# அல்-மிஃராஜ்

## நம் தூதர் ﷺ மஸ்ஜிதுல் அக்ஸாவிலிருந்து வானலோக பயணம் மேற்கொண்டமை

மஸ்ஜிதுல் அக்ஸாவிலிருந்து பெருமானார் முஹம்மத் ﷺ வானலோக பயணம் மேற்கொண்டமையே மிஃராஜ் என குறிப்பிடப்படுகிறது. இந்நிகழ்வானது, ஸஹீஹான ஹதீஸ்களின் மூலமாக நிரூபிக்கப்பட்ட ஒரு உண்மை நிகழ்வாகும். அல்-குர்ஆனைப் பொறுத்தமட்டில் இது தொடர்பாக குறித்துக் கூறவில்லையாயினும், இந்நிகழ்வு நடந்ததை இடம்பாடு கொள்ளும் சில சான்றுகள் அல்-குர்ஆனில் உள்ளன.

மிஃராஜ் தொடர்பாக அல்-குர்ஆனிலே பின்வருமாறு வந்துள்ளது :-

وَلَقَدْ رَءَاهُ نَزْلَةً أُخْرَىٰ ۝١٣ عِندَ سِدْرَةِ ٱلْمُنتَهَىٰ ۝١٤ عِندَهَا جَنَّةُ ٱلْمَأْوَىٰٓ ۝١٥

விளக்கம் : "முஹம்மத் ﷺ அவர்கள் ஜிப்ரீல் அவர்களை இரண்டாவது தடவையாக அவரது மெய்யான தோற்றத்திலே ஏழு வானங்களையும் தாண்டி வளர்ந்து நிற்கும் 'ஸித்ரதுல் முன்தஹா' எனும் இடத்தில் கண்டார்கள். 'ஸித்ரதுல் முன்தஹா' எனும் இடத்துக்கு மேலேதான் முஃமின்கள் குடியிருக்கப்போகும் சுவனமும் இருக்கின்றது."

*அல்-குர்ஆன் அத்தியாயம அந்நஜ்ம் வசனம் 13, 14, 15*

இவ்வசனத்தில் வந்திருக்கும் رأى எனும் பதத்தை வைத்து மிஃராஜ் என்பது கனவில்தான் இடம்பெற்றது. அது யதார்த்தத்தில் நிகழவில்லை எனக் கூற

எவராவது முன்வந்தால், அவருக்கு “இவ்வாறு அல்-குர்ஆனில் வந்திருக்கும் ஒரு சொல்லை அதன் அடிப்படை அர்த்தத்தை விட்டுவிட்டு வேறு அர்த்தம் கொடுப்பதாயின், அச்சொல் அல்-குர்ஆனிலோ அல்லது ஸஹீஹான ஹதீஸிலோ வந்திருக்கும் வேறொரு வசனத்துக்கு முரண்பட்டாலோ அல்லது சீரான பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளாத ஒரு அர்த்தத்தை வழங்கினாலோ தான் இவ்வாறு செய்ய முடியும்.[1] ஆனால் இவ்வசனத்தில் அவ்வாறான எதுவும் இல்லாததால் இச்சொல்லை அதன் அடிப்படை அர்த்தத்தை விட்டும் அகற்றி, வேறு அர்த்தம் கொடுக்க முடியாது” என்பதாக பதிலளிக்கப்படும்.

அல்-இஸ்ராஉ, மி:.ராஜ் பற்றிய ஹதீஸில் நம் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் : “பின்பு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களால் என்னை வானத்தின் பக்கம் உயர்த்திச்சென்று, முதலாவது வானத்தின் வாயலை திறக்குமாறு வேண்டினார்கள். அதற்கு “நீங்கள் யார்?” எனக் கேட்கப்பட்டது. அதற்கு “ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம்” என கூறினார்கள். மீண்டும் “உங்களுடன் வந்திருப்பது யார்?” என கேட்கப்பட்டது. அதற்கு “ என்னுடன் முஹம்மத் ﷺ அவர்கள் வந்திருக்கிறார்கள்” என கூறினார்கள். பின்பு “அவர்கள் வானலோகம் உயர்த்தப்படுவதற்கு வேண்டப்பட்டுள்ளாரா ?” என கேட்கப்பட்டது. அதற்கு “ஆம் அவர்கள்

---

[1] இமாம் பஹ்ருத்தின் அர்ராஸீ – நூல் அல் மஹ்ஸூல்.

வேண்டப்பட்டுள்ளார்கள்” என கூறினார்கள். பின்பு எங்களுக்கு வானத்தின் வாயில் திறக்கப்பட்டது.

இது போன்று ஒவ்வொரு வானங்களாக ஏழு வானத்துக்கும் நம் தலைவர் முஹம்மத் ﷺ அவர்களை அழைத்துச் செல்லப்பட்டது. ஒவ்வொரு வானத்திலும் நபிமார்களை அழைக்கப்பட்டு, நம் தலைவர் முஹம்மத் ﷺ அவர்களை வரவேற்கப்பட்டது. அதன்படி முதல் வானத்தில் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும், இரண்டாவது வானத்தில் ஈஸா மற்றும் யஹ்யா அலைஹிமஸ்ஸலாம் அவர்களும், மூன்றாவது வானத்தில் யூஸுப் அலைஹிஸ்ஸலாம் அவர்களும், நான்காவது வானத்தில் இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்களும், ஐந்தாவது வானத்தில் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்களும், ஆறாவது வானத்தில் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களும், ஏழாவது வானத்தில் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் நம் தூதர் முஹம்மத் ﷺ அவர்களை வரவேற்றனர்.

ஏழாவது வானத்தில் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ‘பைதுல் ம.்.மூர்’ பள்ளிவாசலில் சாய்ந்தவர்களாக இருந்தார்கள். ‘பைதுல் ம.்.மூர்’ என்பது ஒவ்வொரு நாளும் அதனுள் எழுபதாயிரம் மலக்குமார்கள் நுழைகிறார்கள். அதற்குள் நுழைந்த மலக்குமார்கள் மீண்டும் நுழைவதில்லை. பின்பு என்னை ‘ஸித்ரதுல் முன்தஹா’ எனும் இடத்திற்கு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அழைத்து சென்றார்கள். ‘ஸித்ரதுல் முன்தஹா’ என்பது ஒரு மரமாகும். அதனது இலைகள் யானைகளின் காதுகளை போன்றதாகவும் அதன்

பழங்கள் பெரிய குடங்களைப் போன்றதாகவும் இருந்தன. அல்லாஹ்வின் படைப்புகளில் எவரும் அதன் அழகை வர்ணிக்க முடியாது.

எனவே அல்லாஹ் எனக்கு சில விடயங்களை வஹி மூலம் அறிவித்தான். ஒவ்வொரு நாளும் என் மீது ஐம்பது நேர தொழுகையை கடமையாக்கினான். அவற்றை பெற்றுக் கொண்டு மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் வந்தேன். மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ''உமது உம்மத்தினர்கள் மீது அல்லாஹ் எதனை கடமையாக்கினான்?'' எனக் கேட்டார்கள். ''அல்லாஹ் ஐம்பது நேரத் தொழுகைகளை என் உம்மத்தினர் மீது கடமையாக்கினான்'' எனக் கூறினேன். அதற்கு மூஸா அலைஹிஸ்ஸாம் அவர்கள் ''உமது றப்புடைய வஹியை நீர் எந்த இடத்தில் பெற்றீரோ அந்த இடத்திற்கு சென்று, இதை குறைத்துத் தருமாறு வேண்டுங்கள். ஏனெனில் உமது சமுதாயத்தினர்கள் இதற்கு சக்தி பெறமாட்டார்கள். ஏனெனில் நான் பனூ இஸ்ராயீல் சமூகத்தினரை பரீட்சித்து பார்த்திருக்கின்றேன்'' எனக் கூறினார்கள். எனவே நான் வஹியை எந்த இடத்தில் பெற்றேனோ அந்த இடத்திற்கு சென்று ''என்னுடைய றப்பே எனது சமூதாயத்திற்கு கடமையாக்கிய தொழுகையின் எண்ணிக்கையை குறைத்துத் தருவாயாக'' எனக் கேட்டேன். அல்லாஹ் எனக்கு ஐந்து நேரத் தொழுகைகளை குறைத்துத் தந்தான். பின்பு மூஸா அலைஹிஸ்ஸாம் அவர்களிடம் நான் வந்து ''எனது றப்பு ஐந்து நேரத் தொழுகைகளை

குறைத்திருக்கின்றான்'' என்று கூறினேன். அதற்கு மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ''உமது சமுதாயத்தினர் அதற்கும் சக்தி பெறமாட்டார்கள். உமது றப்புடைய வஹியை நீர் எந்த இடத்தில் பெற்றீரோ அந்த இடத்திற்கு சென்று, மேலும் குறைத்துத் தருமாறு வேண்டுங்கள்'' என கூறினார்கள். இவ்வாறு நான் வஹியை எந்த இடத்தில் பெற்றேனோ அந்த இடத்திற்கும் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இருக்கும் இடத்திற்கும் இடையில் போய் வந்துகொண்டிருந்தேன். இறுதியில், ''முஹம்மதே ﷺ உங்களுக்கு ஒவ்வொரு நாளும் ஐந்து நேர தொழுகைகள் மாத்திரமே கடமையாக்கப்பட்டுள்ளன. அவைகளில் ஒவ்வொரு நேரத் தொழுகைக்கும் பத்து நேர தொழுகைகளின் நன்மைகள் வழங்கப்படுகின்றன. எனவே அந்த ஐந்து நேரத் தொழுகைகளுக்கும் ஐம்பது நேர தொழுகைகளுக்குரிய நன்மைகள் வழங்கப்படுகின்றன. யார் ஒரு நல்ல அமலை செய்ய நினைத்து, அதனை செய்ய வில்லையென்றாலும் அவருக்கு ஒரு நன்மை வழங்கப்படும். அதனை செய்தால் அவருக்கு பத்து நன்மைகள் வழங்கப்படும். யார் ஒரு கெட்ட விடயத்தை செய்ய நினைத்து, அதனை அவர் செய்யாவிட்டால் அவருக்கு எந்தப்பாவமும் எழுதப்படமாட்டாது. அதனை செய்தால் அவருக்கு ஒரே ஒரு பாவம் மாத்திரமே வழங்கப்படும்'' என்பதாக எனக்கு வஹியறிவிக்கப்பட்டது. பின்பு மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் வந்து அந்த விடயங்களை தெரிவித்தேன். அதற்கு அவர்கள் ''மீண்டும் வஹியை நீர் எந்த இடத்தில் பெற்றீரோ

அந்த இடத்திற்கு சென்று, குறைத்துத் தருமாறு வேண்டுங்கள்'' என கூறினார்கள். அதற்கு ''நான் இதை விட இலகுவை வேண்டுவதற்கு வெட்கமடைகின்றேன்'' எனக் கூறினேன்.

*அறிவித்தவர் : இமாம் முஸ்லிம்.*[1]

''ஒரு நபியோ, வலியுழ்ழாஹ்வோ அவர்கள் மரணித்ததன் பின்னரும் உயிரோடு இருப்பவர்களுக்கு பலனளிக்க முடியும்'' என்பதற்கான ஆதாரம் மேற்குறித்த ஹதீஸில் இருப்பதை அஹ்லுஸ்ஸுன்னஹ் வல் ஜமாஅத்தினராகிய அஷாயிராக்களும் மாதுரீதிய்யாக்களும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஏனெனில் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மரணித்ததன் பின்னரே மி்.ராஜ் பயணத்தின் போது இந்த சமுதாயத்திற்கு மிகப்பெரும் பிரயோஜனத்தை செய்து இருக்கின்றார்கள். அதாவது தொழுகையின் எண்ணிக்கையை குறைக்குமாறு முஹம்மத் ﷺ அவர்களிடம் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறியதே அந்தப் பிரயோஜனமாகும். இந்த ஹதீஸானது, மரணத்திற்கு பின்னர் யாரும் பிரயோஜனம் அளிக்க மாட்டார்கள் என்றும் நபிமார்களை, வலிமார்களைக் கொண்டு வஸீலா தேடுபவர்களைக் காபிர்கள் என்று கூறும் தற்கால உருவ வணங்கிகளான வஹ்ஹாபிகளுக்கு பெரும் மறுப்பாக அமைந்திருக்கின்றது.

---

[1] ஸஹீஹ் முஸ்லிம் - கிதாபுல் ஈமான் - பாபு அல் இஸ்ராஇ பி ரஸூலில்லாஹி ﷺ இலஸ்ஸமாவாதி வ பர்ழிஸ் ஸலவாத்

# மி:.ராஜின் நோக்கம்

மி:.ராஜின் நோக்கம் முஹம்மத் ﷺ அவர்களை கண்ணியப்படுத்தி, அவர்களுக்கு உலகின் மேற்பகுதியில் உள்ள ஆச்சரியமான விடயங்களை காண்பிப்பதாகும். இது தொடர்பாக அல்-குர்ஆன்,

سُبْحَانَ الَّذِي أَسْرَىٰ بِعَبْدِهِ لَيْلًا مِّنَ الْمَسْجِدِ الْحَرَامِ إِلَى الْمَسْجِدِ الْأَقْصَى الَّذِي بَارَكْنَا حَوْلَهُ لِنُرِيَهُ مِنْ آيَاتِنَا ۚ إِنَّهُ هُوَ السَّمِيعُ الْبَصِيرُ ﴿١﴾

என்பதாக குறிப்பிடுகிறது.

விளக்கம் : “படைப்புகளுக்கு ஒப்பாகுவதை விட்டும் அழ்ழாஹ் பரிசுத்தமானவன். அவன்தான் முஹம்மத் ﷺ அவர்களை புனித மக்கா நகரிலுள்ள க:.பாவிலிருந்து குத்ஸிலுள்ள மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாயலுக்கு இராவழிப்பயணத்தை மேற்கொள்ளச் செய்தான். அப்பள்ளிவாசலை மேன்மைமிக்க பள்ளிவாசலாகவும் அழ்ழாஹ் ஆக்கியுள்ளான். இந்த இஸ்ராஉ எனும் பயணமானது, அழ்ழாஹ் இணை எதுவுமில்லாத தனித்தவன் மேலும் முஹம்மத் ﷺ அவர்கள் அழ்ழாஹ்வின் மெய்யான ஒரு தூதர்



என்பதனையும் அறிவிக்கும் பல அத்தாட்சிகளை நம் தூதர் முஹம்மத் ﷺ அவர்களுக்கு காட்டிக் கொடுப்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டது.''

*அல்-குர்ஆன். அத்தியாயம் அல்-இஸ்ராஉ - வசனம் 01.*

## பயன்தரும் தெளிவுரையொன்று

நிச்சயமாக ஏழு வானங்களையும், எல்லா இடங்களையும் படைத்தவன் அழ்ழாஹ்வாகும். மேலும் அவன் எல்லா இடங்களையும் படைக்க முன்னர் எவ்வித இடமுமின்றி உள்ளவன். எனவே அவன் ஒரு இடத்தில் அல்லது எல்லா இடங்களிலும் இருக்கின்றான் அல்லது யதார்த்தத்தில் வானத்தில் அல்லது அர்ஷின் மீது இருக்கின்றான் அல்லது ஆகாயவெளியில் இறங்கியிருக்கின்றான் அல்லது யதார்த்தத்தில் எங்களுக்கு நெருக்கமாக, யதார்த்தத்தில் தூரமாக இருக்கின்றான் என்று நம்புவது கூடாது. யார் அழ்ழாஹ்விற்கு இடம், திசை இருக்கின்றது என்று கூறுகின்றாரோ அவர் முஸ்லிமாக இருக்க முடியாது. எனவே நிச்சயமாக அழ்ழாஹ் இடமின்றி உள்ளான். அவன் தனது படைப்பினங்களில் எதற்கும் ஒப்பாக மாட்டான் என்ற நம்பிக்கையுடன் இரு ஷஹாதா கலிமாக்களையும் சரியான முறையில் மொழிந்து அதன் பொருளை ஏற்று இஸ்லாத்தில் நுழைய வேண்டும்.

மேலும் இப்னு அப்பாஸ் றழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் எழுதியதாக பொய்யாக கூறப்படும் 'கிதாபுல் மி∴ராஜ்' எனும் நூலை விட்டும் எச்சரிக்கையாக இருத்தல் கட்டாயமாகும்.

# மி.ஃ.ராஜின் போது முஹம்மத் ﷺ அவர்கள் கண்ட ஆச்சரியமான விடயங்கள் சில

***1. நரகத்திற்கு பொறுப்பான மாலிக் அலைஹிஸ்ஸலாம் அவர்களை காணுதல்*** : முஹம்மத் ﷺ அவர்கள் மி.ஃ.ராஜின் இரவில் நரகத்தின் பொறுப்பதிகாரியான மாலிக் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கண்டார்கள். அவர்கள், நம் தலைவர் முஹம்மத் ﷺ அவர்களைப் பார்த்து சிறிதும் புன்னகைக்க வில்லை. அப்போது முஹம்மத் ﷺ அவர்கள் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பார்த்து, "எதற்காக வேண்டி மாலிக் அலைஹிஸ்ஸலாம் மற்றவர்களைப் போன்று புன்னகைக்காமல் இருக்கின்றார்கள்?" என வினவ அதற்கு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், "நிச்சயமாக மாலிக் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அழ்ழாஹ் படைத்ததிலிருந்து அவர்கள் புன்னகைக்கவேயில்லை. அவர்கள் யாராவது ஒருவருக்கு புன்னகைப்பவராக இருந்திருந்தால் நிச்சயம் உங்களைப் பார்த்து அவர்கள் புன்னகைத்திருப்பார்கள்" என பதில் கூறினார்கள்.

***2. அல்-பைதுல் ம.ஃ.மூர்*** : முஹம்மத் ﷺ அவர்கள் ஏழாவது வானத்தில் பைத்துல் ம.ஃ.மூரைக் கண்டார்கள். அது அழ்ழாஹ்வால் சிறப்பிக்கப்பட்ட ஒரு வணக்கஸ்தலாமாகும். மேலும் எவ்வாறு பூமியில் உள்ளவர்களுக்கு க.ஃ.பா சிறப்புமிகு வணக்கஸ்தலமோ அதேபோன்று வானத்தில் உள்ளவர்களுக்கு அது ஒரு வணக்கஸ்தலமாகும். ஒவ்வொரு நாளும் அதற்குள்

எழுபது ஆயிரம் மலக்குகள் நுழைந்து, தொழுதுவிட்டு வெளியேறுவார்கள். ஆனால் அவர்கள் மீண்டும் அதற்குள் நுழையமாட்டார்கள். மலக்குகள் ஒளியினாலானவர்களும், இறக்கைகளைக் கொண்டவர்களுமாகும், மேலும் அவர்கள் ஆண்களுமல்ல பெண்களுமல்ல. அவர்கள் உண்ணுவதோ, பருகுவதோ, திருமணம் செய்வதோ கிடையாது. மேலும் அல்லாஹ் அவர்களுக்கு எதனை கட்டளையிட்டானோ அதற்கு மாறுசெய்யாது, அதனை நிறைவேற்றுவார்கள். அவர்களின் எண்ணிக்கையை அல்லாஹ்வைத் தவிர வேறு யாராலும் மட்டிட முடியாது.

***3. ஸித்றதுல் முன்தஹா*** : அது அல்லாஹ்வால் படைக்கப்பட்ட மிகப்பெரிய ஒரு மரமாகும். அல்லாஹ்வின் படைப்புக்களில் எவருமே வர்ணித்து கூறமுடியாத பல நற்தன்மைகளை கொண்ட அந்த மரத்தைச் சூழ தங்கத்தினாலான பட்டாம்பூச்சிகள் சிறகடித்துக் கொண்டிருக்கும். அதன் அடிப்பாகம் ஆறாவது வானத்திலும் அதன் உச்சி ஏழாவது வானத்தை தாண்டி உயர்ந்திருக்கும்.

***4. சுவர்க்கம்*** : அது ஏழாவது வானத்திற்கு மேலே படைக்கப்பட்டு இப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது. மேலும் அது ஏழாவது வானத்தில் படாமல் அதை விட்டும் பிரிந்ததாகவே படைக்கப்பட்டுள்ளது. அதில் எந்தக் கண்ணும் பார்த்திராத, எந்தக் காதும் கேட்டிராத, எந்த மனிதனின் உள்ளத்திலும் தோன்றிராத

பல இன்பங்கள் தக்வாவுடன்[1] இவ்வுலகில் வாழ்ந்தோருக்காக விஷேடமாக தயார்படுத்தப்பட்டுள்ளதுடன், மேலும் சுவனம் நுழையும் அனைவரும் அனுபவிக்கும் பொதுவான இன்பங்களும் தயார்படுத்தப்பட்டுள்ளன. சுவர்க்க வாதிகள் சுவர்க்கத்தில் நுழைந்ததன் பின் அவர்களின் நிலை பற்றி முஹம்மத் ﷺ அவர்கள் எங்களுக்கு அறிவித்து தருகையில் :- “ஒரு மலக்கு பின்வருமாறு அழைப்பு விடுப்பார் “நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள். ஒருபோதும் நோய்வாய்ப் படவேமாட்டீர்கள். மேலும் நீங்கள் உயிரோடு இருப்பீர்கள், ஒரு போதும் மரணிக்கவேமாட்டீர்கள். மேலும் நீங்கள் வாலிபனாகவே இருப்பீர்கள். ஒருபோதும் வயோதிபமடையவேமாட்டீர்கள். மேலும் நீங்கள் சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டே இருப்பீர்கள் ஒருபோதும் சலிப்படையவேமாட்டீர்கள்” என அழைப்பு விடுவார்.” என சுவன வாழ்க்கை பற்றி தெளிவுபடுத்திவிட்டு, பின்வரும் அல்-குர்ஆன் வசனத்தை ஓதினார்கள்

وَنُودُوٓاْ أَن تِلۡكُمُ ٱلۡجَنَّةُ أُورِثۡتُمُوهَا بِمَا كُنتُمۡ تَعۡمَلُونَ ﴿٤٣﴾

*அத்தியாயம் அல்-அஃராப் - வசனம் 43*

மேலும் முஹம்மத் ﷺ அவர்கள் சுவர்க்கத்தில் ‘ஹூருல் ஈன்’ என்றழைக்கப்படும் சுவனத்துப் பெண்களை கண்டார்கள். அந்த சந்தர்ப்பத்தில் முஹம்மத் ﷺ அவர்களிடத்தில் அந்த சுவர்க்கத்துப்

---

[1] தக்வா எனப்படுவது இஸ்லாத்தில் கட்டாயம் கற்கப்படவேண்டிய கல்வியைக் கற்று, அல்லாஹ்வினால் கடமையாக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றி, அல்லாஹ்வினால் தடைவிதிக்கப்பட்ட ஹறாம்களை தவிர்ந்து இவ்வுலகில் வாழ்வதை குறிக்கும்.

பெண்கள் “நாங்கள் அழகும் சிறப்பும் மிகுந்த மங்கையர்களாகும்.. சங்கையானவர்களின் மனைவிமார்களுமாகும்” எனக் கூறினார்கள்.

மேலும் அதில் முஹம்மத் ﷺ அவர்கள், (அல்வில்தானுல் முஹல்லதூன்) எனப்படும் நிரந்தரமாக சுவர்க்கத்தில் இருக்கும் சிறுவர்களைக் கண்டார்கள். மேலும் இவர்களை அல்லாஹ் தாய், தந்தையின்றி படைத்துள்ளான். இவர்கள் மலக்குகள், மனிதர்கள், ஜின்கள் ஆகிய எந்த ஒரு வர்க்கத்தைச் சார்ந்தவர்களுமல்ல. இவர்கள் சுவர்க்கவாதிகளுக்கு பணிவிடை செய்வதற்காக படைக்கப்பட்டுள்ளார்கள். சுவர்க்கவாதிகளிள் ஒருவருக்கு இந்த சிறுவர்களில் இருந்து ஆகக் குறைந்தது பத்தாயிரம் பேர் பணிவிடைக்காக கொடுக்கப்படும். அந்த சிறுவர்களின் இரு கைகளில் ஒன்றில் தங்கத்தினாலான தட்டும் மற்றையதில் வெள்ளியினாலான தட்டும் காணப்படும்.

***5. அல்-அர்ஷ்*** : பின்பு அல்லாஹ்வின் மிகப் பிரமாண்டமான படைப்பான அர்ஷைக் கண்டார்கள். அதனைச் சூழ மலக்குகள் காணப்பட்டார்கள். அவர்களின் எண்ணிக்கையை அல்லாஹ்வைத் தவிர வேறு யாராலும் அறிய முடியாது. கட்டிலுக்கு உள்ள கால்களைப் போன்று அர்ஷுக்கு நான்கு கால்கள் உள்ளன. அதனை மலக்குகளில் மிக சக்திவாய்ந்த நான்கு பேர் சுமந்து கொண்டிருக்கின்றார்கள். நாளை மறுமையில் அதனை எட்டு மலக்குமார்கள் சுமப்பார்கள். அர்ஷின் பிரம்மாண்டம் தொடர்பாக முஹம்மத் ﷺ அவர்கள் கூறுகையில், “ திறந்த வெளியொன்றில் போடப்பட்ட ஒரு வளையத்தை

போன்றே ஏழு வானங்களும் குர்ஸியுடன் ஒப்பிடுகையில் காணப்படும். அதே போன்று திறந்த வெளியொன்றில் போடப்பட்ட ஒரு வளையத்தை போன்றே குர்ஸியும் அர்ஷுடன் ஒப்பிடுகையில் காணப்படும்.'' எனக் கூறினார்கள்.[1]

தண்ணீர் படைக்கப்பட்டு அதனை அடுத்து படைக்கப்பட்டதே அர்ஷாகும். பின்பு மேன்மைமிகு கலமும் பின்பு 'லவ்ஹுல் மஹ்பூல்' ஆகியன படைக்கப்பட்டது. கியாமத் நாள் ஏற்படும் வரையில் எதுவெல்லாம் உண்டாகுமோ அவைகள் அனைத்தையும் அந்தக் கலம் லவ்ஹுல் மஹ்பூழில் எழுதி, ஐம்பது ஆயிரம் வருடங்களுக்குப் பின்னரே அழ்ழாஹ் வானங்கள், பூமிகளைப் படைத்தான்.

அலீ றழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள் :- ''நிச்சயமாக அழ்ழாஹ் தன்னால் இம்மாதிரியான அதிபிரம்மாண்டமான படைப்புகளையும் படைக்க முடியும் என்பதை வெளிக்காட்டவே அர்ஷைப் படைத்தானே தவிர தனக்கு ஒரு இருப்பிடமாக அதனை எடுத்துக்கொள்வதற்காக அல்ல.''[2]

எனவே யார் அழ்ழாஹ் தஆலா அர்ஷின் மீது உற்கார்ந்திருக்கின்றான் என்று நம்பியிருக்கின்றாரோ அவர் காபிராகி விடுவார். ஏனெனில் அழ்ழாஹ்வைப் போன்று எதுவும் கிடையாது. மேலும் அழ்ழாஹ் எவ்வித இடமுமின்றியே உள்ளான்.

---

[1] அறிவித்தவர் இமாம் இப்னு ஹிப்பான்.

[2] நூல் - அல் பர்கு பைனல் பிரக். பக் 333 மற்றும் நூல் - அத்தப்ஸிரஹ்

ஆனால் சடவாதக் கொள்கை கொண்ட வஹ்ஹாபிகள் “நிச்சயமாக அல்லாஹ் அர்ஷின் மீது உட்கார்ந்திருக்கின்றான்” என்று கூறிவிட்டு “ஆனால் நாம் உட்கார்ந்திருப்பதைப் போன்று அல்ல.” என மழுப்புகிறார்கள். இவர்களுக்கு கொஞ்சமேனும் புத்தியுள்ளதா? எவ்வாறு தான் படைத்த ஒன்றில் அல்லாஹ் உட்கார முடியும்? எப்படி பார்த்தாலும் ‘உட்காருதல்’ என்பது படைப்புகளின் தன்மை ஒன்றாகும். எவ்வாறு படைப்பாளன் தான் படைத்த படைப்புகளிடம் காணப்படும் தன்மை ஒன்றை கொண்டிருக்க முடியும்??. மேலும் உட்காரும் தன்மை கொண்ட ஒன்றுக்கு, மேல் அரைவாசி அதேபோன்று கீழ் அரைவாசி என இரு பகுதிகள் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். இணைக்கப்பட்டது ஒரு படைப்பாக இருக்குமே தவிர வேறில்லை. எனவே எவ்விதத்தில் பார்த்தாலும் உட்காருதல் என்பது அல்லாஹ்விற்கு சாத்தியமற்ற, இருக்கக்கூடாத ஒரு தன்மையாகும்.

**6. கலம் ‘லவ்ஹுல் மஹ்பூழில்’ எழுதும் சப்தம் கேட்ட இடத்தினை முஹம்மத் ﷺ அவர்கள் அடைதல்.**

முஹம்மத் ﷺ அவர்கள் ஸித்ரதுல் முன்தஹாவை வந்தடைந்த பின் லவ்ஹுல் மஹ்பூழில் இருந்து மலக்குமார்கள் தமது ஏடுகளில் கலமினால் பதிவுசெய்து கொண்டிருந்த சத்தம் கேற்கும் இடத்தை அடைந்தவுடன் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை விட்டும் தனிப்பட்டார்கள்.

**7. முஹம்மத் ﷺ அவர்கள் ஆரம்பமோ முடிவோ இல்லாத அல்லாஹ்வின் (கலாமை) பேச்சை கேட்டல்.**

நிச்சயமாக அல்லாஹ்வின் பேச்சு ஆரம்பமோ முடிவோ இல்லாத தன்மையொன்றாகும். அந்தப் பேச்சு எமது பேச்சைப் போன்று ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படும் பேச்சல்ல. அல்லாஹ்வின் பேச்சு, அது சத்தம், எழுத்து, மொழிகளைக் கொண்டதுமல்ல. ஏனெனில் நிச்சயமாக மொழிகள், எழுத்துகள், சத்தங்கள் ஆகியன படைப்புகளின் பேச்சில் காணப்படுவதாகும். அல்லாஹ்வின பரிசுத்த பேச்சிலும் இவைகள் இருப்பதாக நம்பிக்கை கொள்ளக்கூடாது. ஏனெனில் அல்லாஹ் படைப்பினங்களிடம் காணப்படும் எந்த விதமான தன்மையையும் கொண்டவனல்ல. எனவே முஹம்மத் ﷺ அவர்கள் அல்லாஹ்வின் பேச்சை எவ்வித ஓசையும், எழுத்தும், மொழியும் இன்றி கேட்டார்கள் என்றே நம்பிக்கை கொள்ள வேண்டும்.

எழுத்து, சத்தம், மொழி, தொடக்கம், முடிவு போன்ற எதுவும் இல்லாத அல்லாஹ்வின் பரிசுத்த பேச்சைக் கேட்க விடாது இடப்பட்ட திரையை முஹம்மத் ﷺ அவர்களை விட்டும் அகற்றி அல்லாஹ்வின் தூய பேச்சை கேட்கும் அற்புத பாக்கியத்தையும் அந்த இரவில் நம் தூதருக்கு அல்லாஹ் வழங்கினான். ‘ஸித்ரதுல் முன்தஹா’ என்ற இடத்துக்கு மேலே உள்ள ஓர் இடத்திலேயே இந்த பாக்கியத்தை நம் தூதர் பெற்றார்கள். அந்த இடமானது மலக்குமார்கள் அல்லாஹ்வை துதித்து வணக்க வழிபாடுகள் செய்யும் தூய்மையான ஓர் இடமாகும். மேலும் அந்த இடமானது அல்லாஹ்வுக்கு மாறு செய்யப்படாத ஒரு இடமுமாகும். மாறாக அந்த இடத்தில் தான் அல்லாஹ் யதார்த்தத்தில் இருக்கிறான் என்று நம்பிக்கை கொள்வது இஸ்லாமிய தூய

கொள்கைக்கு எதிரானதாகும். ஏனெனில் அல்லாஹ், இடங்கள் படைக்கப்பட முன்பும் இடம் ஏதுமின்றி உள்ளவன்.

## அல்லாஹ்வின் எழுத்துகளற்ற, மொழியில்லாத, ஒலியில்லாத பரிசுத்தமான அந்த பேச்சிலிருந்து முஹம்மத் ﷺ அவர்கள் பின்வருவனவற்றை புரிந்து கொண்டார்கள்

- தனது உம்மத் மீது தினந்தோறும் ஐவேளைத் தொழுகை விதியாக்கப்பட்ட கட்டளையையும்,
- பெரும்பாவங்கள் செய்து தௌபா செய்யாது மரணிப்போரில் அல்லாஹ் நாடிய சிலருக்கு மன்னிப்பு வழங்கப்படும் என்பதையும்,
- இஸ்லாமிய கொள்கை நிராகரிப்புடன் அதாவது குப்ருடன் மரணித்தவர் எவராக இருந்தாலும், மனிதர்களுடன் எவ்வளவுதான் சிறந்த முறையில் பழகியிருந்தாலும் அவருக்கு மன்னிப்பு வழங்கப்படமாட்டாது. அவர் நிரந்தரமாக நரகில் தங்கிவிடுவார் என்பதையும்,
- மேலும் இந்த உம்மத்தில் யார் ஒரு நலவை செய்வாரோ அவருக்கு அது போன்ற பத்து நன்மைகள் வழங்கப்படும் என்பதையும், யார் ஒரு நலவை நாடி அதை செய்யவில்லை என்றிருந்தாலும் அவருக்கு ஒரு



நன்மையும், யார் ஒரு தீய செயலை நாடி அதை செய்வாரோ அவருக்கு ஒரு தீமையும் வழங்கப்படும் என்பதையும்,

படைப்புகளுக்கு எந்த விதத்திலும் ஒப்பு, உவமை இல்லாத அழ்ழாஹ்வின் பேச்சில் இருந்து நம் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் விளங்கிக் கொண்டார்கள்.

## மேலும் மி∴றாஜுடைய இரவன்று தம் உள்ளத்தினால் அழ்ழாஹ்வை காணுதல்

உருவமற்ற, உடலற்ற பரிசுத்தமான அழ்ழாஹ்வை உள்ளத்தினால் பார்க்கும் அரும் பாக்கியத்தை அழ்ழாஹ் தன் ஹபீப் முஹம்மத் ﷺ அவர்களுக்கு இந்த இரவில் அருளினான்.

உருவமற்ற, உடலமைப்பு இல்லாத தோற்றம், வடிவம் இல்லாத அழ்ழாஹ்வை பார்க்கும் ஆற்றலை அழ்ழாஹ் முஹம்மத் ﷺ அவர்களின் உள்ளத்திற்கு வழங்கினான். ஆகவே எங்கள் தலைவர் முஹம்மத் ﷺ அவர்கள் அழ்ழாஹ்வை தன் உள்ளத்தினால் பார்த்தார்களேயன்றி தன் கண்களினால் பார்க்கவில்லை என்பதே உண்மை. ஏனெனில் அழிந்து விடும் இந்த வெற்றுக் கண்ணினால் அழ்ழாஹ்வை காண முடியாது என்பதை பின்வரும் நபி மொழி நமக்கு உணர்த்துகிறது. “அறிந்து கொள்ளுங்கள் நீங்கள் மரணிக்கும் வரை உங்கள் றப்பாகிய அழ்ழாஹ்வை நிச்சயம் உங்கள் கண்ணால் காணமாட்டீர்கள்”

நாளை கியாமத் நாளையில் அழிவில்லாத தமது கண்களினால் மு∴மின்கள் நிச்சயம் அழ்ழாஹ்வை

பார்ப்பார்கள். இப்பாக்கியமானது அழ்ழாஹ்வையும் அவனது தூதரையும் உரிய முறையில் அறிந்து ஈமான் கொண்டு அழ்ழாஹ்வுக்கு எதையும் உவமை செய்யாது பரிசுத்தமாக அழ்ழாஹ்வை வணங்கி ஈமானுடன் மரணித்தோருக்கு மாத்திரம் உரித்தானதாகும்.

முஃமின்கள் மறுமையில் அழ்ழாஹ்வை
இருப்பிடமின்றி
ஓர் திசையின்றி

பார்ப்போருக்கும், பார்க்கப்படுவோனாகிய அழ்ழாஹ்வுக்கும் இடையில் எவ்வித தூரமும் இன்றி பார்ப்பார்கள். சுருங்கக்கூறின் ஒரு சிருஷ்டியை பார்ப்பது போலன்றி முஃமின்கள் அழ்ழாஹ்வை பார்ப்பார்கள்.

நாம் ஒரு படைக்கப்பட்ட பொருளை பார்க்கும் போது அது நமக்கு முன்னாள் இருக்கும் அல்லது நமக்கு வலதில் அல்லது நமக்கு இடதில் அல்லது உயரத்தில் அல்லது பணிவில் காணப்படும். மேற்கூறப்பட்ட ஒரு திசையில் ஒரு இடத்தில் அது அமைவு பெற்றிருக்கும். அத்தோடு பார்ப்பவர்களுக்கும் பார்க்கப்படும் பொருளுக்கும் இடையில் ஒரு தூரம் காணப்படும். ஆனால் மறுமையில் முஃமின்கள் அழ்ழாஹ்வை மேற்கூறப்பட்ட எதுவுமின்றி பார்ப்பார்கள். இது தொடர்பாக அல்-குர்ஆன் பின்வருமாறு தெளிவுபடுத்துகிறது.

وُجُوهٌ يَوْمَئِذٍ نَّاضِرَةٌ ﴿٢٢﴾ إِلَىٰ رَبِّهَا نَاظِرَةٌ ﴿٢٣﴾

விளக்கம் : “முஃமின்கள் சுவர்க்கத்தில் இருந்து கொண்டு அழ்ழாஹ்வை இருப்பிடமின்றி, ஓர் திசையின்றி, பார்ப்போருக்கும், பார்க்கப்படுவோனாகிய

அழ்ழாஹ்வுக்கும் இடையில் எவ்வித தூரமும் இன்றி பார்ப்பார்கள். சுவர்க்கவாசிகள் அனுபவிக்கும் அனைத்து இன்பங்களைப் பார்க்கிலும் அழ்ழாஹ்வை காணும் பாக்கியமே பெரும் பாக்கியமாகும்.''

*அல்-குர்ஆன் அத்தியாயம் அல்-கியாமஹ் வசனம் 22, 23*

இது தொடர்பாக முஹம்மத் ﷺ அவர்கள் பின்வருமாறு கூறினார்கள் : ''காபிர்கள், அழ்ழாஹ்வுக்கு உருவம் கற்பித்தவர்கள், அழ்ழாஹ்வை மனிதனைப்போல் அல்லது வேறு படைப்பு போல் நம்பியிருந்தவர்கள், அழ்ழாஹ்வை உலகிலும் மறுமையிலும் காணமாட்டார்கள். அவர்கள் நரகிலே நிரந்தரமாக தங்கிவிடுவார்கள்.''

كَلَّآ إِنَّهُمْ عَن رَّبِّهِمْ يَوْمَئِذٍ لَّمَحْجُوبُونَ ﴿١٥﴾

விளக்கம் :- ''நிச்சயமாக காபிர்கள் கியாமத் நாளையில் அழ்ழாஹ்வை பார்ப்பதை விட்டும் தடைசெய்யப்படுவார்கள்.''

*அல்-குர்ஆன் அத்தியாயம் அல்-முதப்பிபீன் வசனம் 15*

நம் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் அழ்ழாஹ்வை தன் உள்ளத்தினால் இருதடவை கண்டார்கள் என்பது இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் பின்வரும் ஸஹீஹான ஹதீஸின் ஆதார அடிப்படையில் நிரூபிக்கப்படுகிறது. ''முஹம்மத் ﷺ அவர்கள் அழ்ழாஹ்வை இரு தடவைகள் தன் உள்ளத்தினால் கண்டார்கள்'' என

مَا كَذَبَ ٱلْفُؤَادُ مَا رَأَىٰٓ ﴿١١﴾ وَلَقَدْ رَءَاهُ نَزْلَةً أُخْرَىٰ ﴿١٣﴾

ஆகிய அல்-குர்ஆன் வசனங்களுக்கு விரிவுரை செய்யும் போது இப்னு அப்பாஸ் ரழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள். நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

அதே நேரம், அழ்ழாஹ்வை காணும் அரிய பாக்கியத்தை பெற்றமையும், அவனது எழுத்துகளற்ற, ஓசையற்ற பரிசுத்தமான பேச்சை கேட்டதும் ஒரே சந்தர்ப்பத்தில் நிகழவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் அழ்ழாஹ், ஒருவருக்கு தன் பரிசுத்தமான பேச்சை புரியவைப்பதாக இருந்தால்

ஒன்று வஹியின் மூலம் புரிய வைப்பான்

அல்லது ஒரு மறைவை ஏற்படுத்தி தன் பேச்சை கேட்க வைப்பான்

அல்லது ஒரு வானவரின் மூலம் புரியவைப்பான்.

அல்-குர்ஆனிலே இது தொடர்பாக

۞ وَمَا كَانَ لِبَشَرٍ أَن يُكَلِّمَهُ ٱللَّهُ إِلَّا وَحْيًا أَوْ مِن وَرَآيِ حِجَابٍ أَوْ يُرْسِلَ رَسُولاً فَيُوحِيَ بِإِذْنِهِۦ مَا

يَشَآءُ ۚ إِنَّهُۥ عَلِيٌّ حَكِيمٌ ﴿٥١﴾

என்பதாக வந்துள்ளது.

அத்தியாயம் அஷ்ஷூறா. வசனம் 51.

இது மூன்றையும் தவிர்த்து அழ்ழாஹ்வை பார்த்த வண்ணம் அழ்ழாஹ்வின் பேச்சை கேட்கும் ஒரு நிகழ்வை அல்-குர்ஆனோ அஸ்ஸுன்னஹ்வோ நமக்கு கற்றுத் தரவில்லை. எனவே இந்த வசனத்தின் கூற்றுப்படி அழ்ழாஹ்வை உள்ளத்தினால் பார்த்ததும் அழ்ழாஹ்வின் பரிசுத்த பேச்சை கேட்டதும் ஒரே நேரத்தில் நடைபெறவில்லை என்பதை புரிய முடிகிறது.

# மிஃராஜுடைய இரவில் முஹம்மத் ﷺ அவர்கள் பெற்ற இன்னுமொரு பாக்கியம் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை மெய்யான தோற்றத்திலே கண்டமை

முஹம்மத் ﷺ அவர்கள் முதல் முறையாக ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அவரது மெய்யான தோற்றத்தில் மக்காவில் இருக்கும்போது கண்டார்கள். ஆனால் மயக்கமுற்றார்கள். இரண்டாவது தடவையாக பறக்கத் பொருந்திய மிஃராஜுடைய இரவில் மீண்டும் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை மெய்யான தோற்றத்தில் கண்டார்கள். ஆனால் மயக்கமுறவில்லை.

அல்-குர்ஆனில் சூறா அந்நஜ்முடைய

ثُمَّ دَنَا فَتَدَلَّىٰ ﴿٨﴾ فَكَانَ قَابَ قَوْسَيْنِ أَوْ أَدْنَىٰ ﴿٩﴾

ஆகிய வசனங்களின் விளக்கம் பற்றி ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகையில், “அவர்தான் முஹம்மத் ﷺ அவர்களிடம் வந்து செல்லும் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் ஆகும். இம்முறை அவரை அல்லாஹ் எந்த ரூபத்தில் படைத்துள்ளானோ அதே ரூபத்தில் வந்திருக்கிறார். அடிவானத்தை அவரது உடல் மறைத்து விட்டது ” என்று குறிப்பிட்டார்கள்.

*அறிவிப்பவர் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா*
*நூல் : ஸஹீஹ் முஸ்லிம்*

மேற்குறித்த சூறா அந்நஜ்மின் எட்டாம், ஒன்பதாம் வசனங்களை சிலர் தப்பாக விளங்கி, முஹம்மத் ﷺ அவர்கள் அல்லாஹ்வின் அருகே சென்றார்கள். அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் இடையில்

இரு முழங்களே அல்லது அதைவிட குறைவாகவே இருந்தது என்று விளக்கம் சொல்லுகிறார்கள். அவ்வாறு விளக்கம் சொல்வது இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றிவிடும். ஏனெனில் இவ்வாறான நம்பிக்கையானது, அழ்ழாஹ் வானங்களுக்கு மேலால் தரிபட்டுள்ளான் என்ற மிக மோசமான சடவாதக் கொள்கையின் பக்கம் அழைத்துச் சென்றுவிடும்.

மேற்குறித்த திருவசனத்தின் மிக சரியான விளக்கமானது, அன்னை ஆயிஷா ரழியழ்ழாஹு அன்ஹா அவர்கள் சொன்னது போன்று ஜீப்ரில் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அவர்களது மெய்யான தோற்றத்தில் முஹம்மத் ﷺ அவர்களை அண்மித்து வந்தார்கள். அவ்விருவருக்கும் இடையில் இரு முழங்களை விட மிகக் குறைவான அளவே இடைவெளி இருந்தது என ஈமான் கொள்வதே நேர்வழிபெற்றவர்களின் நம்பிக்கையாகும்.

மேலும் மிஃறாஜுடைய இரவன்று முஹம்மத் ﷺ அவர்கள் யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தாரையும் கடந்து சென்றார்கள் என சில ஹதீஸ்கள் அறிவிக்கின்றன. யஃஜூஜ் மஃஜூஜ் என்பவர்கள் மனித குலத்தை சேர்ந்தவர்களே. ஆனாலும் அவர்கள் அனைவரும் காபிர்களாகும். மேலும் அவர்களுக்கு முஹம்மத் ﷺ அவர்கள் தஃவா பிரச்சாரமும் செய்துள்ளார்கள். நரகில் நுழையும் மனிதர்களை விட நரகில் நுழையும் ஜின்களின் எண்ணிக்கையே மிக அதிகமாகும். துல்கர்னைன் எனப்படும் வலியுழ்ழாஹ் ஒருவர் அவர்களை ஊர்களுக்குள் நுழையவிடாது இரும்பையும்

செம்பையும் உருக்கி ஒரு மதிலை எழுப்பியுள்ளார்கள். அவர்கள் அந்த தடைச்சுவருக்குப்பின் தான் இருந்து வருகிறார்கள். அல்லாஹ் நாடியுள்ள காலம் வரை அதற்குப் பின்தான் இருப்பார்கள்.

## விண்ணுலகப்பயணம் மிஃறாஜை நிறைவு செய்து முஹம்மத் ﷺ அவர்கள் மீண்டும் மக்கா வந்த பின் நடைபெற்ற ஒரு சில நிகழ்வுகள்

அல்லாஹ்வின் இறுதித் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மக்கா நகரிலிருந்து பலஸ்தீனிலுள்ள மஸ்ஜிதுல் அக்ஸா சென்றதும், அங்கிருந்து ஏழு வானங்கள் கடந்து சென்று மீண்டும் மக்கா திரும்பியதும் இரவின் மூன்றின் ஒரு பகுதி நேரத்திலேயே நிகழ்ந்தது. இதை முஹம்மத் ﷺ அவர்கள் உம்மு ஹானிஃ றழியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு தெரிவித்தார்கள். அத்தோடு தான் மக்காவிலிருந்து பலஸ்தீனில் அமைந்துள்ள புனிதஸ்தலமான மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு ஓர் இரவின் குறுகிய நேரப்பகுதியில் சென்றுவந்ததை காபிர்களுக்கும் தெரிவித்தார்கள். காபிர்கள் இதை நம்பாது, முஹம்மத் ﷺ அவர்களை பொய்ப்பிக்க ஆரம்பித்தனர்.

குறைஷிகளை சேர்ந்த சிலர் ஒன்று சேர்ந்து அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் சென்றனர். அவர்களிடத்தில் உங்கள் நண்பர் “ஒரே இரவிலே மக்காவிலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸா சென்று மீண்டும் மக்காவுக்கு வந்ததாக கூறுகின்றாரே

இதைப்பற்றி நீர் என்ன நினைக்கின்றீர்கள் ?" என வினவினர். உடனே அபூ பக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் "என் நண்பர் அவ்வாறு கூறுகிறாரா ?" எனக் கூறிவிட்டு "அவர்கள் அதை கூறியிருந்தால் நிச்சயம் அது உண்மையே என்பதற்கு நானே சாட்சி" என கம்பீரமாக பதில் கூறினார்கள். இதைக் கேட்ட அந்தக் காபிர்கள் ஒரு இரவுப் பொழுதில் விடிவதற்கு முன்பாகவே மக்காவிலிருந்து ஷாம் தேசம் சென்று மீண்டும் மக்கா வந்ததாக அவர் சொல்வதை நீர் உண்மைப்படுத்துகிறீரா? எனக் கேட்டபோது, "ஆம் இதை விட மிக அபூர்வமான விடயமாகிய வானத்திலிருந்து அவருக்கு வஹிவருவதையே உண்மைப்படுத்துபவன் நான். இதையா உண்மைப்படுத்தாமல் இருந்து விடுவேன் ? "என பதில் கூறி காபிர்களின் வாயை அடைத்தார்கள் அமீருல் மு∴மினீன் அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்.

இந்த நிகழ்வை வைத்தே அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் "அஸ்ஸித்தீக் "என அழைக்கப்படலானார்கள் என்பதாக அபூ ஸலமா றழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

முஹம்மத் ﷺ அவர்கள் இதற்கு முன்னதாக மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு போகவே இல்லை. ஆனாலும் ஒரே இரவிலேயே அங்கு சென்றுவந்ததாக கூறித்திரியும் இவரிடம் மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாயலைப் பற்றியும் அது அமைந்திருக்கும் விதம், கட்டிட அமைப்பு போன்றன பற்றியும் விசாரித்தால் அவரின் பொய்யை அம்பலப்படுத்தலாம் என நினைத்த அபூ ஜஹ்ல், சில காபிர்களை

அழைத்துக்கொண்டு பெருமானார் முஹம்மத் ﷺ அவர்களிடம் சென்றான். பலஸ்தீனில் அமைந்துள்ள அக்ஸா பள்ளிவாசலைப் பற்றி விபரமாகக் கூறுமாறு கேட்டான். முஹம்மத் ﷺ அவர்களும் அப்பள்ளிவாசல் சென்று கண்ட அனைத்தையும் ஒன்றன் பின் ஒன்றாக முன்வைத்தார்கள். அப்போது அங்கிருந்த காபிர்களில் ஏற்கனவே மஸ்ஜிதுல் அக்ஸாவை சென்று கண்ட சிலர் "அழ்ழாஹ்வின் மீது ஆணையாக முஹம்மத் ﷺ அவர்கள் அப்பள்ளிவாசல் தொடர்பாக கூறுவது மிகச் சரியே" எனக் கூறியதுடன், மறுவார்த்தை பேசாது அபூஜஹ்லும் ஏனைய காபிர்களும் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

## மிக முக்கியமான வேண்டுகோள்

அழ்ழாஹ் ஒரு ஜடம் அல்லது ஏதோ ஒரு இடத்தில் இடம் எடுத்து இருக்கின்றான் அல்லது மிஃறாஜின் போது முஹம்மத் ﷺ அவர்கள் யதார்த்தத்தில் அழ்ழாஹ்வுக்கு அருகில் இருந்தார்கள் அல்லது அழ்ழாஹ் அர்ஷில் உட்கார்ந்திருக்கின்றான் என்ற நம்பிக்கை கொண்டோர் இந்த குப்ரிய்யத்தான எண்ணங்களை தம் உள்ளத்தை விட்டும் அகற்றி, இரு ஷஹாதாக் கலிமாக்களை கூறிவிடவும். ஏனெனில் மேற்குறித்த சிந்தனைகள் யாவும் அழ்ழாஹ்வை படைப்பினம் போல் நம்பியிருப்போரின் சிந்தனைகளாகும். மேற்குறித்த சிந்தனைகளுடையோர் அழ்ழாஹ்வை படைப்புகளுடன் ஏதோ ஒரு விதத்தில் உவமை செய்கின்றார்கள். அத்தோடு பின் வரும் புனித அல்-குர்ஆன் வசனத்தையும் தங்களையறியாது பொய்ப்பிக்கின்றார்கள்.

لَيۡسَ كَمِثۡلِهِۦ شَيۡءٞۖ وَهُوَ ٱلسَّمِيعُ ٱلۡبَصِيرُ ۝١١

விளக்கம் : "அழ்ழாஹ்வுடைய யதார்த்தத்திலோ, அவனது தன்மைகளிலோ, அவனது செயலிலோ அவனுக்கு ஒப்பாகக்கூடியது எதுவுமே இல்லை. அவன் யாவற்றையும் காதுகளின்றி கேட்பவனாகவும், கண்களின்றி பார்ப்பவனாகவுமுள்ளான்."

அல்-குர்ஆன் அத்தியாயம் அஷ்ஷூறா வசனம் 11.

முஹம்மத் ﷺ அவர்கள் மற்றும் ஸஹாபாக்கள் உட்பட பின்வந்த அனைத்து மு.்.மின்களின் கொள்கையான அஹ்லுஸ்ஸுன்னஹ் வல் ஜமாஅஹ்வின் கொள்கைகளை தெளிவுபடுத்தும் கிரந்தமான இற்றைக்கு சுமார் 1100 வருடங்களுக்கு முன் தொகுக்கப்பட்ட அல் அகீததுத் தஹாவியஹ் என்ற நூலைத் தந்த ஸலபுஸ்ஸாலிஹீன்களில் ஒருவரான இமாம் அபூஜ.்.பர் அத்தஹாவீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள், அந்நூலில் பின்வருமாறு கூறுகிறார்கள்.

تعالى أي الله عن الحدود والغايات والأركان والأعضاء والأدوات

"அழ்ழாஹ் அளவுகள், தீர்ச்சைகள், கோணங்கள், கை, கால், முகம் போன்ற உறுப்புகள், உதடு, நாக்கு போன்ற சிறு உறுப்புகள் அனைத்தை விட்டும் பரிசுத்தமானவன்"

மேற்கூறப்பட்ட பண்புகள் எதுவும் அழ்ழாஹ்வுக்கு இருப்பதாக நம்பிக்கை கொள்ளக்கூடாது.

இடம் எனப்படுவது சடப்பொருட்கள் தாம் அமைவு பெறுவதற்கு எடுத்துக்கொள்ளும் ஒரு

வெற்றுப்பகுதியாகும். இடங்கள் என்பன அழ்ழாஹ்வால் படைக்கப்பட்டதாகும். அழ்ழாஹ் இடங்கள் படைக்கப்பட முன்னரும் இடம் எதுவுமின்றி உள்ளவன். எனவே அழ்ழாஹ் ஏதோ ஒரு இடத்தில் இருக்கிறான் அல்லது எல்லா இடங்களிலும் யதார்த்தமாகவே இருக்கிறான் அல்லது அவன் படைப்புகளுக்குள்ளே இருக்கிறான் என்ற சிந்தனைகள், நம்பிக்கைகள் யாவும் அழ்ழாஹ்வைப் பற்றிய மோசமான நம்பிக்கை கொண்டோரின் குப்ரிய்யத்தான நம்பிக்கைகளாகும்.

அமீருல் மு.ஃ.மினீன் அலீ ரழியழ்ழாஹு அன்ஹு அவர்களும் மேற்குறித்த அதே கருத்தை பின்வருமாறு தெளிவாக கூறியிருக்கின்றார்கள்.

"كان الله ولامكان وهو الآن على ما عليه كان

அழ்ழாஹ் இடங்கள் படைக்கப்பட முன்னரும் இடமின்றியே உள்ளவன். இடங்களை படைத்த பின்னரும் அவன் இடமின்றியே உள்ளான்”[1]

மேலும் அழ்ழாஹ் ஏதோ ஒரு திசையில் தான் யதார்த்தத்தில் இருக்கிறான் என நம்புவது கூடாது. உதாரணமாக அழ்ழாஹ் மேல் திசையில் இருந்து கொண்டிருக்கிறான் அல்லது எல்லா திசையிலும் அவன் யதார்த்தமாக இருக்கிறான் என்று நம்பியிருப்பதை கூறலாம். இந்த நம்பிக்கைகள் யாரிடத்தில் காணப்படுமோ நிச்சயமாக அவர் இஸ்லாமிய மார்க்கத்தை விட்டும் வெளியேறியவரே. ஏனெனில் திசைகள் மொத்தம் ஆறு இருக்கின்றன.

---

[1] நூல் : இமாம் அபூ அல்-மன்ஸூர் அல்-பக்தாதீ அவர்களின் அல் பர்கு பைனல் பிரக்

மேல் திசை, கீழ் திசை, வலது திசை, இடது திசை, முன் திசை மற்றும் பின் திசை ஆகியன. எந்தவொரு படைப்பாயினும் அது இன்னொரு படைப்புடன் கவனிக்கையில் மேற்கூறப்பட்ட திசைகளில் ஒரு திசையை கொண்டதாகவே காணப்படும். ஆகவே திசைகளில் அமைவு பெறுவது படைக்கப்பட்டவைகளின் இயல்பாகும். ஆனால் திசைகளையும் ஏனைய படைப்புகளையும் படைத்தவன் அழ்ழாஹ், திசை பெறுதல் என்ற பண்பைக் கொண்டு அவன் வர்ணிக்கப்படமாட்டான். ஏனெனில் அவன் படைப்புகளுக்கு முற்றிலும் மாற்றமானவன். யாராவது, அழ்ழாஹ் மேல் திசையில் யதார்த்தத்தில் இருக்கிறான் அல்லது எல்லா திசைகளிலும் யதார்த்தத்தில் இருக்கிறான் என்று நம்பியிருப்பாரோ அவர் அழ்ழாஹ்வை படைப்பினத்துடன் ஒப்பிட்டவராகவே கவனிக்கப்படுவார். நஊது பில்லாஹி மின்ஹு

ஸலபுஸ் ஸாலிஹீன்களில் ஒருவரான இமாம் அபூ-ஜ.்.பர் அத்தஹாவீ றஹிமஹுழ்ழாஹ் அவர்கள் தனது கிரந்தமான அல்-அகீததுத் தஹாவிய்யஹ்வில்

" لا تحويه الجهات الست

ஆறு திசைகளில் எந்தத் திசையாலும் அழ்ழாஹ் உள்வாங்கப்படமாட்டான் என்பதே அஹ்லுஸ்ஸுன்னஹ் வல் ஜமாஅத்தினரின் நம்பிக்கையாகும்" எனக் கூறியுள்ளார்கள்.


**முக்கிய குறிப்பு :-**

மி.்.றாஜின் இரவின் போது முஹம்மத் ﷺ அவர்கள் அழ்ழாஹ் தரிபட்டிருக்கும் இடத்தை சென்றடைந்தார்கள் (நஊது பில்லாஹ்) எனும்

நம்பிக்கை தெளிவான வழிகேடும் குப்ருமாகும். இந்த நம்பிக்கை மேற்கூறப்பட்ட அஹ்லுஸ்ஸுன்னஹ் வல் ஜமாஅத்தின் அடிப்படைக் கொள்கையான அழ்ழாஹ் இடம், திசையின்றி உள்ளான் என்ற சத்தியக் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டதுமாகும்.

மேற்கூறப்பட்டது போன்று, மி.்.றாஜுடைய இரவில் முஹம்மத் ﷺ அவர்கள் அழ்ழாஹ் இருக்கும் இடத்தை சென்றடைந்தார்கள் என்ற படு மோசமான கருத்தை உள்ளடக்கியதாக இப்னு அப்பாஸ் ரழியழ்ழாஹு அன்ஹு அவர்கள் எழுதியதாக பொய்யாக புனையப்பட்ட ‘கிதாபுல் மி.்.றாஜ்’ எனும் நூலை விட்டும் இன்னும் பல நூல்களை விட்டும் கடுமையாக எச்சரிக்கின்றோம். மு.்.மின்கள் இது போன்ற நச்சுக்கருத்துகள் உள்ளடங்கிய நூல்களை வாசிப்பதை விட்டும் மிகவும் கவனமாக இருந்து கொள்ள வேண்டும்.

பூமியில் வாழும் நாங்கள் எவ்வாறு க.்.பதுழ்ழாஹ்வை புனிதஸ்தலமாக எடுத்து எங்களது தொழுகைகளின் போது அதையே முன்னோக்கி தொழுகிறோம். அதை வலம் வருகிறோம். அதை அழ்ழாஹ் வரிசைப்படுத்தி வைத்துள்ளதால் அதை மதிக்கிறோம்.



கண்ணியப்படுத்துகிறோம். இதைப்போலவே ஏழு வானங்களுக்கு மேலால் காணப்படும் அர்ஷும் திகழ்கிறது. அதை மலக்குமார்கள் வலம் வருகிறார்கள். அர்ஷை சூழ மழைத்துளிகளை விடவும் அதிக எண்ணிக்கை கொண்ட மலக்குமார்கள் இருந்துகொண்டே இருக்கின்றார்கள். பூமியில் உள்ளவர்களுக்கு புனிதஸ்தலமாக ஆக்கப்பட்டுள்ள க.்.பதுல்லாஹ்விலே அழ்ழாஹ் தரிபட்டிருக்கின்றான் அல்லது உட்கார்ந்திருக்கின்றான் என்று நம்பிக்கை கொள்ளப்படாதது போல் வானத்தில் உள்ள மலக்குமார்களுக்கு புனிதஸ்தலமாக ஆக்கப்பட்டுள்ள அர்ஷிலும் அழ்ழாஹ் தரிபட்டிருப்பதாக அல்லது அதிலே உட்கார்ந்திருப்பதாக நம்பிக்கை கொள்ளப்பட மாட்டாது.

எனவே மு.்.மின்களாகிய நாம் வணங்கக்கூடிய அழ்ழாஹ் இடம் எடுத்துக்கொள்ளல், திசை பெற்றிருத்தல் போன்றவைகளை விட்டும் தூய்மையானவன். யாவற்றையும் படைத்தவன் அழ்ழாஹ். அழ்ழாஹ், தான் படைத்த எதன் பக்கமும் எந்தத் தேவையும் இல்லாதவன். அழ்ழாஹ் இடம், திசையின்றியே உள்ளான்.

ولله الحمد والصلاة والسلام عليك يارسول الله